வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 22.1.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

**பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கம், புரட்சிகரமான **மக்கள் சக்தி** இயக்கமாகவே மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

**தேசிய சுகாதார இயக்கத்தை**, வரும் 2026-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து அமல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில், குழந்தைகளுக்கான **புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருள் கண்காட்சியை**, இன்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி பிராந்தியத்தில் கடந்த 10 ஆண்டுகளில், சுமார் 1 லட்சத்து 45 ஆயிரம் **செல்வ மகள் சேமிப்புக் கணக்குகள்** தொடக்கப்பட்டுள்ளதாக, முதுநிலை அஞ்சல் கோட்டக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மோடி-பெண் குழந்தை

மத்திய அரசின், **பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கம், அனைத்து பிரிவு மக்களின் பங்கேற்புடன் புரட்சிகரமான மக்கள் சக்தி இயக்கமாகவே மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இந்த இயக்கத்தின் 10-ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி இன்று இதுகுறித்து, சமூக ஊடகத்தில் பதிவு ஒன்றை அவர் வெளியிட்டு உள்ளார். வாழ்வின் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான கல்வி மற்றும் இதர வாய்ப்புகளை வழங்கும் சூழலை, பெண் குழந்தைகளுக்கு உருவாக்கித் தருவதிலும், பாலின பாகுபாட்டை போக்குவதிலும், **பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கம் முக்கிய பங்காற்றி இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். நாட்டில் பெண் குழந்தை விகிதம் குறைவாக இருந்த பல மாவட்டங்களில் தற்போது நிலைமை கணிசமாக மேம்பட்டுள்ளதாகவும், தீவிர விழிப்புணர்வு பிரச்சாரங்களால், ஆண்-பெண் சமத்துவத்தின் முக்கியத் துவம் பற்றிய உணர்வு ஆழமாகி இருப்பதாகவும் அவர் கூறி உள்ளார். திட்டத்தின் அமலாக்கத்தில் முக்கிய மைல் கற்கள் எட்டப்பட்டதற்கு, மக்கள் மற்றும் பல்வேறு சமூக சேவை அமைப்புகளின் அர்ப்பணிப்பான முயற்சிகளே காரணம் என்றும், இதற்கு தாம் நன்றி தெரிவித்துக்

கொள்வதாகவும் பிரதமர் கூறி உள்ளார். கள அளவில் இந்த இயக்கத்தை துடிப்பான இயக்கமாக மாற்றிய அனைத்து தரப்பினருக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். பெண் குழந்தைகளை பாதுகாக்கவும், படிக்க வைக்கவும், பெண் குழுந்தைகள் பாகுபாடின்றி முன்னேற ஏதுவான சமூகம் ஒன்றை உருவாக்கவும், அனைவரும் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

*மோடி-மாநாடு*

பிரதமர் திரு நரேந்திர மோடி, வரும் 28-ஆம் தேதி புவனேஸ்வரில், செழிப்பான ஒடிசா-ஒடிசாவில் தயாரிப்போம் மாநாட்டை தொடக்கி வைத்து தொழிலதிபர்கள் மற்றும் முதலீட்டாளர்களிடையே உரையாற்றுகிறார். இந்தியா மற்றும் சுமார் 12 வெளிநாடுகளில் இருந்து தொழிலதிபர்கள் முதலீட்டாளர்கள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். கிழக்கு இந்தியாவின் தொழில் கேந்திரமாக ஒடிசாவை மேம்படுத்தும் வகையில், பல்வேறு துறைகளில் உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்துடன் இந்த 2 நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

*மத்திய அமைச்சரவை*

தேசிய சுகாதார இயக்கத்தின் அமலாக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, மத்திய அமைச்சரவை இன்று மறுஆய்வு செய்து,

ஏற்கனவே 21-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, வரும் 2026-ஆம் ஆண்டுவரை இந்த இயக்கத்தை தொடர்ந்து அமல்படுத்த, ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தொழில்- வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல், புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார். 2025-26-ஆம் ஆண்டு சந்தைப் பருவத்தில், கச்சா சணல் மீதான குறைந்தபட்ச ஆதரவு விலையை, குவிண்டாலுக்கு 5 ஆயிரத்து 650 ரூபாயாக, கடந்த ஆண்டை விட 315 ரூபாய் உயர்த்தி வழங்கவும், மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. வடகிழக்கு பிராந்தியத்தில், கச்சா சணல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 40 லட்சம் குடும்பங்கள் இதனால் பயன் பெறும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

விளையாட்டுப் பொருள்

புதுச்சேரியில், கலை பண்பாட்டுத் துறை சார்பில் கருவடிக்குப்பம் காமராஜர் மணி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, குழந்தைகளுக்கான புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருள் கண்காட்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார். வரும் 28-ஆம் தேதி வரை நடைபெற உள்ள இக்கண்காட்சியில், மொத்தம் சுமார் 60 அரங்குகளில், புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியில் தினசரி மாலை, உள்ளூர் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உணவு உள்ளிட்ட அரங்குகளும் இடம் பெற்றுள்ளன. கண்காட்சியின் தொடக்க விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில், மாணவர்களின் அறிவு வளர்ச்சி மற்றும் உலக ஞானத்தை மேம்படுத்தவே இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், பாரம்பரிய விளையாட்டுகளை குழந்தைகள் அறிந்து கொள்ள கண்காட்சி உதவிகரமாக இருக்கும் என்றும் தெரிவித்தார். இதுபோன்ற ஏற்பாடுகளையும் கல்வித் தொடர்பான அரசின் பல்வேறு திட்டங்களையும், மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, வாழ்வில் வெற்றி பெறுவதுடன் புதுச்சேரிக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்...............

**(வாய்ஸ்)**

கண்காட்சியின் தொடக்க விழாவில் குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*செல்வ மகள் புதுச்சேரி*

புதுச்சேரி பிராந்தியத்தில் கடந்த 10 ஆண்டுகளில், பெண் குழந்தைகளுக்கான, சுமார் 1 லட்சத்து 45 ஆயிரம் செல்வ மகள் சேமிப்புக்

கணக்குகள் தொடக்கப்பட்டுள்ளதாக முதுநிலை அஞ்சல் கோட்டக் கண்காணிப்பாளர் இனகொல்லு காவ்யா தெரிவித்துள்ளார். செல்வ மகள் சேமிப்புத் திட்டத்தில் 10 ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று எமது செய்தியாளருக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் அவர் இதைத் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டில் மட்டும் இதுவரை, 6 ஆயிரத்து 910 செல்வ மகள் சேமிப்பு கணக்குகள் தொடக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். பெண் குழந்தைகள், செல்வ மகள் சேமிப்புக் கணக்கு தொடக்கிய 15 ஆண்டுகளின் முடிவில், தாங்கள் சேமித்த பணத்தை வட்டியுடன் எடுத்துக் கொள்ளலாம் என்றும், மேல்படிப்பு மற்றும் திருமணச் செலவுகளுக்கு பயன் உள்ளதாக இது அமையும் என்றும் அவர் தெரிவித்தார். செல்வ மகள் சேமிப்புக் கணக்கில், ஆண்டு தோறும் குறைந்த பட்சம் 250 ரூபாய் செலுத்தினால் போதுமானது என்றும் சேமிப்பு மீது 8.2 சதவிகித வட்டி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அஞ்சல் கோட்ட அதிகாரியின் பேட்டியில் இருந்து சில பகுதிகள்..................

(வாய்ஸ்)

பெண் குழந்தைக்களுக்காக செல்வ மகள் சேமிப்புக் கணக்கு தொடக்கி உள்ள பெற்றோர்களில் ஒருவர் புவனேஸ்வரி எமது செய்தியாளரிடம் பேசுகையில் ..........

(வாய்ஸ்)

*புயல் நிவாரணம்*

புதுச்சேரியில், ஃபெஞ்சல் புயல் மற்றும் கனமழை காரணமாகவும், சங்கராபரணி மற்றும் பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை, சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். இதைத் தொடர்ந்து புதுச்சேரி பகுதியைச் சேர்ந்த 7 ஆயிரத்து 736 விவசாயிகளுக்கு மொத்தம் 12.22 கோடி ரூபாய் நிவாரணம், இன்று முதல் அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. ஏற்கனவே ஏனாம் பகுதி விவசாயிகள் 199 பேருக்கு, மொத்தம் சுமார் 24.6 லட்சம் ரூபாய் நிவாரணம் கடந்த 6-ஆம் தேதி வழங்கப்பட்டதாகவும், காரைக்கால் பகுதி விவசாயிகள் 5 ஆயிரத்து 20 பேருக்கு, மொத்தம் சுமார் 11.64 கோடி ரூபாய் நிவாரணம், கடந்த 16-ஆம் தேதி முதல் வழங்கப்பட்டு வருவதாகவும் வேளாண் அமைச்சர் அலுவலகம், செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.புதுச்சேரி பகுதி விவசாயிகளுக்கு நிவாரணம்

வழங்கும் பணிகளை தொடக்கி வைக்கும் நிகழ்ச்சியில் வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம், மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி-வீட்டு வசதி*

புதுச்சேரியில் பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், இந்திரா நகர் தொகுதியை சேர்ந்த 6 பயனாளிகளுக்கு, தலா 4.2 லட்சம் ரூபாய் மூன்றாம் தவணை மானியம், மற்றும், ஒரு பயனாளிக்கு 1.6 லட்சம் ரூபாய் இரண்டாம் தவணை மானியத்தை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம் ஆகியோர் வழங்கினார். குடிசை மாற்று வாரிய அதிகாரிகள் உடன் இருந்தனர்.

*காரை-வாக்காளர் தினம்*

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு காரைக்கால் மாவட்ட தேர்தல் துறை இன்று காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கலை-அறிவியல் கல்லூரியில், பள்ளி-கல்லூரி மாணவ-மாணவிகளுக்கான விவாதப் போட்டி ஒன்றை நடத்தியது. இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, தேசிய வாக்காளர் தினத்தன்று பரிசுகள் வழங்கப்படும் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

*விளையாட்டு ஆணையம்*

புதுச்சேரியில் உள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையம், வரவிருக்கும் கல்வியாண்டில் பல்வேறு விளையாட்டுக்கான பயிற்சிகளுக்கு மாணவர்களை தேர்ந்தெடுக்க உள்ளது. பளு தூக்குதல், கோ-கோ மற்றும் கபடி பிரிவுகளுக்கு, வரும் 27-28 ஆகிய தேதிகளிலும், வாலிபால் பிரிவுக்கு, வரும் 28-29 ஆகிய தேதிகளிலும், மாணவர் தெரிவு நடைமுறைகள் மேற்கொள்ளப்படும். இதில் கலந்து கொள்வதற்கான விண்ணப்ப படிவங்கள், அந்தந்த நாட்களில் காலை 6 மணிக்கு, பயிற்சியாளர் மூலம் வழங்கப்படும் என்றும் உரிய சான்றிதழ்களை எடுத்து வந்து இதில் கலந்து கொள்ளலாம் என்றும் என விளையாட்டு பயிற்சி மையம் அறிவித்துள்ளது. கூடுதல் விவரங்களுக்கு, லாஸ்பேட்டையில் உள்ள, SAI பயிற்சி மையத்தை நேரடியாக அணுகலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி- சாகுபடி மானியம்*

புதுச்சேரியில் நடப்பாண்டு தைப் பட்டத்தில், பழ வகை மரங்கள், வாழை, பூக்கள், மரவள்ளி மற்றும் காய்கறி வகைகளை பயிரிட்ட விவசாயிகள் அடுத்த மாதம் 28-ஆம் தேதிக்குள், சாகுபடிக்கு பிந்தைய மானியம் பெற விண்ணப்பிக்கலாம் என வேளாண் துறை அறிவித்துள்ளது. இதற்கான விண்ணப்ப படிவங்களை, 23-ஆம் தேதி முதல் உழவர் உதவியகங்களில்

பெற்றுக் கொள்ளலாம், அல்லது, வேளாண் துறையின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*காய், கனி காட்சி*

புதுச்சேரியில் வேளாண்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, வேளாண் விழா மற்றும் 35-ஆவது காய்-கனி காட்சி, வரும் பிப்ரவரி 7 முதல் 9-ஆம் தேதி வரை, தாவரவியல் பூங்காவில் நடைபெற உள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலை தொடர்பான அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும், ஆராய்ச்சி அமைப்புகளும், தங்களின் படைப்புகள் மற்றும் செயல்பாடுகளை காட்சி படுத்த உள்ளன. பள்ளி மாணவர்கள், விவசாயிகள் மற்றும் தோட்டக் கலை ஆர்வலர்களின் படைப்புகளும் இடம் பெற உள்ளன. வேளாண் விழாவின் ஒரு பகுதியாக வீட்டுக் காய்கறித் தோட்டம், மாடி வீட்டுத் தோட்டம், ரங்கோலி உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட உள்ளன. புதிய வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்து கருத்தரங்குகள் விழாவில் நடைபெறும் என்றும் உயர்ரக நடவுக் கன்றுகள் விற்பனைக்கு வைக்கப்படும் என்றும் மாநில வேளாண் அமைச்சர் அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

கும்பமேளா

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக்ராஜில் தற்போது நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில், மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள, காதி இந்தியா அரங்கு, பெரும் எண்ணிக்கையிலான மக்களை கவர்ந்து வருகிறது. நாட்டின் வளமான பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையிலான, உள்ளூர் கதர்-கிராமப் பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் இதில் இடம் பெற்றுள்ளன. பாரம்பரியமான கைவினைத் திறனுடன், நீடித்த தன்மையை ஒருங்கிணைக்கும் அம்சங்களுக்கும் நாட்டின் ஒற்றுமை மற்றும் கலாச்சார மாண்புகளை பேணுவதில் கதர் துறையின் பங்கு பணிகளுக்கும், காதி இந்தியா அரங்கில் முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில், சுதேசி இயக்கத்தின் சின்னமாக திகழ்ந்த கதர், தற்போது, சுயசார்பு இந்தியாவின் அடையாளமாக மேம்பட்டு இருப்பதை வெளிப்படுத்தும் வகையில், இந்த ஏற்பாடு அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

**பெண் குழந்தைகளை பாதுகாப்போம்-பெண் குழந்தைகளை படிக்க வைப்போம்** இயக்கம், புரட்சிகரமான **மக்கள் சக்தி இயக்கமாகவே** மேம்பட்டுள்ளதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

**தேசிய சுகாதார இயக்கத்தை**, வரும் 2026-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து அமல்படுத்த, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுச்சேரியில், குழந்தைகளுக்கான புத்தகங்கள் மற்றும் விளையாட்டுப் பொருள் கண்காட்சியை, இன்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

புதுச்சேரி பிராந்தியத்தில் கடந்த 10 ஆண்டுகளில், சுமார் 1 லட்சத்து 45 ஆயிரம் செல்வ மகள் சேமிப்புக் கணக்குகள் தொடக்கப்பட்டுள்ளதாக, முதுநிலை அஞ்சல் கோட்டக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------